21st March 1961]

SRI V. K. KOTHANDARAMAN : இந்த பாலாறு பேஸின் விதிகளிலே, ஸ்பிரிங் சானலிலிருந்து 2,000 அடி என்று இருக்கிறது. அதே போன்று ஒரு கிணறுக்கும் இன்னொரு கிணறுக்கும் 2,000 அடி இருக்கவேண்டுமென்று முறை இருக்கிறது. இது நியாயமற்ற முறை என்று சர்க்கார் உணரு கிறதா ? கிணறுகள் எவ்வளவு தூரத்தில் இருந்தாலும் ஸ்பிரிங் சானலிலிருந்து 500 அடி என்று நிர்ணயித்து இதைத் திருத்தி அமைப்பார்களா ?

THE HON. SRI P. KAKKAN : என்னுடைய தகவல்படி, 500 அடி என்று இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பக்கத்திலே கிணறு இருக்கும்பொழுது ஏன் இந்தமாதிரி உத்தரவு பிறப்பிக்கவேண்டுமென்று கேட்கிறார்கள். ஒரு கிணறு இருக்கும்பொழுது, இன்னொரு கிணற்றுக்கு பெர்மிஷன் கொடுத்தால், இங்கேயும் தண்ணீர் இருக்காது, அங்கேயும் தண்ணீர் இருக்காது. இதை எல்லாம் பார்த்துத் தான் செய்கிறோம்.

SRI S. M. ANNAMALAI : வட ஆற்காட்டிலே எத்தனையோ நதிகள் ஓடுகின்றன. இந்த பாலாறு பேசின் விதிகளை வைத்துக்கொண்டு அவை எல்லா நதிகளுக்கும் பொருந்தும் என்று சொல்லுவது நியாயமா ? பாலற்றைப் பொறுத்தவரையில் இருந்தாலும் பரவாயில்லை. மற்ற எல்லாக் கிளை நதிகளுக்கும் இது பொருந்தும் என்று சொல்லுவதால், ஆர்ட்டீஷியன் வெல்கள், ரிவர் பம்பிங் ஸ்கீம்கள் கொண்டுவர முடியாமல் இருக்கிறதே. கிளை நதிகளுக்கு 1,000 அடி என்று அமைச்சர் சொன்னார் கள். அதைக் குறைந்தபட்சம் 200 அடிக்குக் குறைப்பதற்கு சர்க்கார் முன்வருவார்களா ?

THE HON. SRI P. KAKKAN: கனம் அங்கத்தினர் திரு. கோதண்டராமன் 500 அடியாகக் குறைக்கவேண்டுமென்று சொன்ன பொழுது, முடியாது என்று சொன்னேன். இப்பொழுது அங்கத்தினர் 200 அடிக்குத் தளர்த்த முடியுமா என்று கேட்கிறார். எல்லாம் பரிசீலனையில் இருக்கிறது. இப்பொழுது எந்த முடிவும் சொல்வதற்கு இல்லை. ஏற்கெனவே பரிசீ லனை செய்து கீழே இருக்கிற ஆயக்கட்டுதாரர்களையும் கலந்து, அவர் களுக்கும் பாதகமாக இல்லாத முறையிலே, இந்த மாதிரி செய்தால்தான் நல்லது என்று கருதி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

Aluminium factory at Mettur

* 976 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—மேட்டூரில் அலுமினிய தொழிற்சாலை எப்போது ஆரம்பிக்க உத்தேசம் ?

THE HON. SRI R. VENKATARAMAN : The Madras Aluminium Company Limited, is taking steps to establish an aluminium factory at Mettur. According to present indications the factory may go into production in a couple of years.

SRI V. K. KOTHANDARAMAN : இது தனியார் துறையிலா அல்லது பொதுத் துறையிலா ? மூலதனம் எவ்வளவு ?

THE HON. SRI R. VENKATARAMAN : தனியார் துறையிலே நடக் கிறது. அதனுடைய "ஆதரைஸ்டு காபிட்டல்" சற்றேறக்குறைய 10 கோடி ரூபாய்.

SRI A. VEDARATHNAM : இதில் எதிர்பார்க்கக் கூடிய உற்பத்தி அளவு எவ்வளவு ?

THE HON. SRI R. VENKATARAMAN : பத்தாயிரம் டன் அலுமினியம்.